# தெளிவத்தை ஜோசப்

16.02.2014

அமுத விழா சிறப்பிதழ்

விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம்

## விஷ்ணுபுரம் விருது பெற்ற





# தெளிவத்தை ஜோசப்


வெளியீடு மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்

அனுசரணை VIRAKESARI வீரகேசரி

# தெளிவத்தை ஜோசப் அறுவடைகள்




# தெளிவத்தை ஜோசப் அன்றும் - இன்றும்



# தெளிவத்தை ஜோசப் விருதுகள்










| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | இரா. சடகோபன் |
| உதவி | : | ஆர். சுபாஷினி |
| செய்திகள், படங்கள் உதவி | : | மல்லியப்பு சந்தி திலகர் |
| பக்க வடிவமைப்பு | : | கே. விஜயதர்ஷினி<br>எஸ். தேவிகாகுமாரி<br>எஸ். சரண்யா |
| ஒருங்கிணைப்பு | : | அன்டன் சுகந்தன் |
| உதவி | : | வி. அசோகன் |

# நேர்மை... இதயசுத்தி... துணிச்சல்...



60களில் மலையகத்தில் ஏற்பட்ட சமூக எழுச்சியின் ஓர் அங்கமான இலக்கிய பரப்பினுள் துளிர் விட்ட பல்வேறு படைப்பாளர்களில் ஒருவரான தெளிவத்தை ஜோசப் அரை நூற்றாண்டு காலமாக தொடர்ந்தும் அத்துறையில் செயலாற்றி, மலையக இலக்கியத்திற்கும், சமூகத்திற்கும் பெருமை சேர்த்தவர். தனது படைப்புகளுக்கான வெற்றிப் பரிசுகளோடு இலக்கிய பரப்பினுள் நுழைந்த அவர், அரை நூற்றாண்டுக்கு பின்னர், கடல் கடந்து, தமிழ் நாட்டில் விஷ்ணுபுரம் தந்த பாராட்டினையும் பரிசினையும் பெற்றுக் கொண்டமை அவருக்கு மாத்திரமின்றி அவர் சார்ந்த சமூகத்திற்கும் பெருமை தரும் ஒரு விடயமாகும்.

ஜோசப் தனது பெயரில் தெளிவத்தை என்ற தனது பிறப்பிடத்தை சேர்த்து கொண்டமை அவரது இலக்கிய படைப்புகளுக்கு ஒரு மண் வாசனையும் அடையாளத்தையும் தந்தது. மலையக மக்களின் இருப்பும் அடையாளமும் கேள்விக்குட்படுத்தபடுகின்ற இன்றைய சூழ்நிலையில் அவரது செயற்பாடு மலையகம் என்ற அடையாளத்தை பேணுவதற்கும் அது குறித்த சிந்தனைக்கும் அடித்தளம் இட்டது என்பது நினைவுபடுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

அவரின் நேர்மை, இதயசுத்தி, துணிச்சல் போன்ற சீரிய தனி மனித பண்புகளும் அவர் சார்ந்த சமூகத்தின்பால் அவருக்கிருந்த அக்கறை என்பவை அவரது இலக்கிய ஆளுமையை செழுமைப்படுத்தியது எனலாம். இந்த அரை நூற்றாண்டில், 60களிலிருந்து அவரோடு தனிப்பட்ட வகையிலும், இலக்கிய ரீதியிலும் தொடர்பு கொண்டுள்ளமையை ஒரு பெரும் பேறாகவே நான் கருதுகின்றேன். இவரோடும் இன்னும் சில மூத்த எழுத்தாளர்களோடும் நான் கொண்டிருக்கும் தொடர்பு என்னை மலையக இலக்கிய முயற்சிகளோடு தொடர்ந்தும் ஈடுபாடு செய்ய வைத்து எனக்கு மன மகிழ்ச்சியை தந்து கொண்டிருக்கின்றது.

2011இல் மலையக கல்விமான் அமரர் இரா. சிவலிங்கம் அவர்களது 12ஆவது நினைவுப் பேருரையை நிகழ்த்தச் செய்து அவரை பெருமைப்படுத்தி சிவலிங்கம் ஞாபகார்த்த குழு பெருமிதம் கொண்டது.

80 வயதை தொட்டு அமுத விழா காணும் தெளிவத்தை ஜோசப் என்ற ஆளுமை இன்னும் ஆற்றலோடு செயற்படுவது ஒரு வரப்பிரசாதம் ஆகும். இன்னும் பல ஆண்டுகளுக்கு தொடந்தும் அவரது பங்களிப்புகள் பொதுவாக ஈழத்து இலக்கியத்திற்கும் குறிப்பாக மலையக இலக்கியத்திற்கும் வளம் சேர்க்க வேண்டும் என்பதே எல்லோருடைய ஆவலாகும்.

இத்தகைய பெருமை பொருந்திய ஒரு இலக்கிய பெருமகனுக்கு, அவரது 80வது வயதில் வாழ்த்துக்கள் கூறுவதில் பெரு மகிழ்வு கொள்கின்றேன்.

***எம். வாமதேவன்,*** காப்பாளர் (ம/எ/ம)
முன்னாள் செயலாளர்
**தோட்ட உட்கட்டமைப்பு, வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு**

# காலங்கள் சாவதில்லை...!



பிறப்பு : சந்தனசாமி ஜோசப்
பெப்ரவரி 16, 1934 (அகவை 79)
பணி : எழுத்தாளர்
அறியப்படுவது : புதின, சிறுகதை எழுத்தாளர்

தெளிவத்தை ஜோசப் (சந்தனசாமி ஜோசப், பிறப்பு: பெப்ரவரி 16, 1934) ஈழத்தின் சிறுகதையாளர், நாவலாசிரியர், இலக்கிய ஆய்வாளர். இலங்கையின் மலையகப் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவர். அறுபதுகளில் எழுதத்தொடங்கி எழுபதுகளில் இலக்கிய உலகில் தனித்துவம் மிகுந்த படைப்பாளியாக மலர்ந்தவர். சாதாரண தோட்டத்தொழிலில் அல்லாடிக்கொண்டிருக்கும் தொழிலாளிகளைப் போன்ற உதிரி மனிதர்களை பாத்திரங்களாகக் கொண்டவை இவரது படைப்புலகம். காலங்கள் சாவதில்லை என்பது இவருடைய முக்கியமான நாவல். நாமிருக்கும் நாடே சிறுகதைத் தொகுதிக்காக இலங்கை சாகித்திய விருது பெற்றுள்ளார். இவரது குடை நிழல் என்ற புதின நூல் 2010 ஆம் ஆண்டுக்கான யாழ் இலக்கிய வட்டம் இலங்கை இலக்கியப் பேரவை விருதைப் பெற்றுள்ளது.

தெளிவத்தை ஜோசப் 2013 ஆம் ஆண்டுக்கான விஷ்ணுபுரம் இலக்கிய விருதைப் பெற்றார்.

வெளியான நூல்கள் [தொகு]

காலங்கள் சாவதில்லை (1974, நாவல், வீரகேசரி வெளியீடு)
நாமிருக்கும் நாடே (1979, சிறுகதைகள், வைகறை வெளியீடு)
பாலாயி (1997, மூன்று குறுநாவல்கள், துரைவி வெளியீடு)
மலையக சிறுகதை வரலாறு (2000, துரைவி வெளியீடு)
இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும் (அச்சில், மூன்றாவது மனிதன் வெளியீடு)
குடை நிழல் (புதினம், 2010)

இலங்கையில் ஏற்கெனவே இரண்டு தடவைகள் தேசிய சாகித்திய விருதுகளைப் பெற்றுள்ள தெளிவத்தை ஜோசப், கொடகே பதிப்பகத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் யாழ். இலக்கிய வட்டத்தின் சம்பந்தன் விருது ஆகியனவற்றையும் பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஒன்பதாவது எழுத்தாளர் விழா மெல்போர்னில் நடைபெற்றபொழுது அவர் சிறப்புவிருந்தினராக அழைக்கப்பட்டார். அவரது பவளவிழாவை முன்னிட்டு குறிப்பிட்ட எழுத்தாளர் விழாவில் கலை, இலக்கிய சங்கத்தின் சிறப்புவிருதும் வழங்கப்பட்டது. இவ்விழாவில் கலந்துகொண்ட ஜெயமோகன், தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் அன்றையதினம் விருது வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

தெளிவத்தை ஜோசப், தமிழ் நாட்டில் சில வருடங்களுக்கு முன்னர் நடந்த தமிழ் இனி மாநாட்டிலும் கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நடந்த இலக்கிய சந்திப்புகளிலும் கலந்துகொண்டவர். தெளிவத்தை ஜோசப் சிறுகதை, நாவல் மற்றும் இலக்கிய விமர்சனத்துறையில் நூல்களை எழுதியிருப்பதுடன் இலங்கை, மலையக இலக்கிய வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பையும் வழங்கிய முன்னோடி படைப்பாளியாவார்.

http://ta.wikipedia.org/s/19w8 *கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து.*

# அமுத விழா காணும் தெளிவத்தை ஜோசப் அவர்களின் இலக்கியப் பயணம்

இலங்கை நாடானது கிராமிய பொருளாதார முறைமையில் இருந்து பெருந்தோட்ட பொருளாதார முறைக்கு கால் பதித்து கோப்பி, தேயிலை பயிர்செய்கைகளை ஆரம்பிக்கத் தொடங்கியவுடன் பொருளாதாரத்தில் மாத்திரமின்றி சமூக, பண்பாட்டு, கலை இலக்கிய கட்டமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அந்த வகையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்துக்கு வளம் சேர்ப்பதற்காக தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர் மக்களும் வந்து சேர்ந்தனர். பச்சை வனங்களை பசுந்தளிர் கோப்பி, தேயிலை பயிர் நிலங்களாக மாற்றிய பெருமை இம் மக்களையே சாரும்.

வனப்புமிக்க இலங்கையின் வளமான நீர்வீழ்ச்சிகளில் ஒன்றான துன்கிந்தை நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இலங்கையின் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் பல தேயிலை தோட்டங்கள் அமைந்துள்ளன. அதில் ஊவா கட்டவலை எனும் தோட்டத்துக்கு வந்து சேர்ந்த தொழிலாளர்களுடன் அவர்களது பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்க வந்த சந்தனசாமி ஆசிரியருக்கும் பரிபூரணம் அம்மையாருக்கும் 1934ஆம் ஆண்டு மகனாக பிறந்தவர் ஜோசப்.

ஊவா கட்டவலை தோட்டத்துப் பள்ளியில் தனது தந்தையையே குருவாகக் கொண்டு கல்வியை ஆரம்பித்தவர் சிலகாலம் தமிழகத்திலும் (கும்பகோணம்) பின்னர் பதுளை பீட்ஸ் கல்லூரியிலும் கல்வியை தொடர்ந்திருக்கிறார்.

கத்தோலிக்க இறைபக்தி நிறைந்த குடும்பப் பின்னணியோடு இல்லறத்தில் பிலோமினா அவர்களை கரம்பிடித்திருக்கும் இவர், நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். இன்றும் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கணக்காளராக தொழிலுக்கு புறப்பட்டு விடும் இவர் இலங்கையின் சாமான்ய பிரஜைகளில் ஒருவர். சக மனிதர்களோடு சக மனிதனாக சகஜமாக வாழ்ந்துவரும் இவர் பொதுப் போக்குவரத்தில் சக பயணியாக மக்களோடு மக்களாக வாழ்க்கைப் பயணத்தில் இணைந்திருப்பவர்.

இவர் நாளாந்த வாழ்வில் மக்களோடு பழகுகின்ற தன்மையும், அவரது சமூக பிரக்ஞையும், சமூகம் நோக்கிய அவரது வித்தியாசமான பார்வையும் அவரது படைப்புகளில் ஒரு வித்தியாச தன்மையையும் யதார்த்தத்தையும் கொண்டுவந்து விடுகின்றது.

மக்களின் வாழ்க்கையை தமது எழுத்துக்களின் ஊடாக படைப்பாக்கம் செய்யும் செழுமை பெற்றவர் ஜோசப். அவர் ஒவ்வொரு படைப்புக்குள்ளும் சமூக வாழ்வின் பலவேறு நுணுக்கங்களையும் வெளிக் கொணர்ந்திருப்பவர்.

எப்போதும் தேடல் மிகுந்த இவரது வாசிப்புப் பழக்கம் இவரது வீட்டினை ஒரு வாசிகசாலையாகவும், பலநூறு புத்தகங்களைக் கொண்ட ஒரு நூலகமாகவும் ஆக்கிவிட்டிருக்கின்றது.

1963 இல் பதுளை தெளிவத்தை எனும் தோட்டத்தில் ஆசிரியராகவும் பகுதிநேர எழுதுவினைஞராகவும் தொழில் தொடங்கியவர் அப்போதே தமிழகத்தில் இருந்து வெளிவந்த உமா பேசும் படம் கொழும்பில் இருந்து வெளிவந்த கதம்பம் ஆகிய இதழ்களுக்கு எழுதி தெளிவத்தை ஜோசப் எனும் இலக்கிய பெயருக்கு சொந்தகாரரானார்.

1963 ஆம் ஆண்டு வீரகேசரி பத்திரிகை நடாத்திய மலையக சிறுகதைப் போட்டியில் பாட்டி சொன்ன கதை என்ற கதையின் ஊடாக தன்னை அங்கீகாரம் பெற்ற எழுத்தாளராக மாற்றிக்கொண்டவர். தனது மனைவியின் பிலோமினா என்ற பெயரிலும், தமது பிள்ளைகளான திரேசா, சியாமளா, ரவீந்திரன், ரமேஸ், போன்ற பெயர்களிலும் ஜேயார், ஜோரு என்கின்ற புனைப் பெயர்களிலும் சிறுகதை, நாவல், இலக்கிய கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள், வானொலி நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்பட வசனம் என பல்வேறு தளங்களிலும் தனது இலக்கிய ஆளுமையை பதிவு செய்திருப்பவர்.

இலங்கையில் உருவான 'புதிய காற்று' என்ற திரைப்படம் இவரது திரைக்கதை வசனத்தோடு உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.

காதலினால் அல்ல, காலங்கள் சாவதில்லை, நாமிருக்கும்நாடே, பாலாயி, மலையக சிறுகதை வரலாறு, குடை நிழல், நாங்கள் பாவிகளாக இருக்கிறோம், இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியல் வரலாறு என பல்வேறு படைப்புகளை தந்திருக்கிறார். கடந்த ஐம்பது ஆண்டுகளில் பல்வேறு சஞ்சிகைகள், பத்திரிகைகளில் அறுபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.

மலையக சிறுகதை வரலாறு, துரைவி தினகரன் சிறுகதைகள், உழைக்கப்பிறந்தவர்கள் போன்ற படைப்புக்களின் ஊடாக மலையக இலக்கிய வரலாற்றை பதிவு செய்துள்ளார். இதன் தொகுப்பாசிரியர் தானே என எங்கும் தன்னை முன்னிலைப்படுத்திக்கொள்ளாதவர். சுதந்திர இலங்கையின் ஐம்பது சிறுகதைகள் எனும் தொகுப்பிலும் இவரது சிறுகதை இடம்பெற்றுள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, சிங்கப்பூர், என பல வெளிநாடுகளும் இவரை அழைத்து கௌரவித்திருப்பது இலங்கை, மலையக இலக்கியத்துக்கு கிடைத்த பெரும் கௌரவமாகவே அமைகிறது.


இலங்கையில் வெளிவரும் இலக்கிய இதழ்களான மல்லிகை, ஞானம், கொழுந்து, தமிழமுது ஆகியனவும் கனடாவை தளமாகக் கொண்டு வெளிவரும் உரையாடல் தனது முதலாவது இதழிலும் (2014) தனது அட்டைப்படத்தில் தெளிவத்தை ஜோசப் அவர்களை பதிப்பித்து கௌரவம் செய்திருக்கின்றன.

அடிப்படையில் கணக்காளர் என்ற தொழிலின் ஊடகவே தனது வாழ்க்கையை நடாத்திவரும் இவர் இலக்கிய வேட்கையோடு ஆர்வமாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்கிக்கொண்டிருக்கும் இவர் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவராக இருந்து தனது அடுத்த தலைமுறைகளுக்கு வழிகாட்டியாக திகழ்கிறார். 2012/2013 ஆண்டு காலத்தில் இலங்கை, சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் செயற்பட்டு பெரமை சேர்த்தவர்.

தெளிவத்தை ஜோசப் அவர்கள் தனது படைப்புகளுக்காக பல்வேறு விருதுகளை வென்றவர். இலங்கை அரச சாகித்திய விருது, கலாபூஷணம் விருது, தேசிய இன ஒற்றுமைக்கான சாகித்திய விருது, கம்பன் கழக இலக்கிய விருது ஆகியவற்றோடு 2008ஆம் ஆண்டு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய தமிழியல் விருதினையும் தமிழியல் வித்தகர் பட்டத்தினையும் பெற்றவர்.

அத்தோடு, மலையக சிறுகதை வரலாறு எனும் ஆய்வு நூலுக்காக 2001ஆம் ஆண்டு பண்டிதமணி சி.கணபதிபிள்ளை நினைவாக வழங்கப்படும் உயர் விருதான சம்பந்தன் விருதினை பெற்றுக்கொண்ட முதல் மலையக எழுத்தாளர் என்ற பெருமை பெற்றவர். தனது குடை நிழல் என்ற நாவலுக்காக தென்னிந்தியாவின் சுபமங்களா பரிசினை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு இவரது இலக்கிய சேவையை கௌரவித்து பேராதனை பல்கலைக்கழகம் 2007ஆம் ஆண்டு உயர் விருதினை வழங்கியிருக்கிறது. 2011ஆம் ஆண்டு கொடகே நிறுவனம் வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருதும், 2013ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்க விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தின் எழுத்தாளரான ஜெயமோகன் அவர்களின் பிரபலம் பெற்ற படைப்பான விஷ்ணுபுரம் பெயரில் நிறுவப்பெற்றுள்ள விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் 2013ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருதினை தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு வழங்கி கௌரவித்தது. இதற்கு முன்னர் அ.மாதவன், புமணி மற்றும் கவிஞர் தேவதேவன் ஆகிய இந்திய எழுத்தாளர்கள் விஷ்ணுபுரம் பெற்றுக்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



இதுவரை நூலுரு பெற்றுள்ள தெளிவத்தை ஜோசப் அவர்களின் படைப்புகள்.

காலங்கள் சாவதில்லை நாவல், வீரகேசரி வெளியீடு 1974
நாமிருக்கும் நாடே சிறுகதைத் தொகுதி 1979
பாலாயி 3 குறுநாவல்கள் துரைவி வெளியீடு 1997
மலையக சிறுகதை வரலாறு துரைவி வெளியீடு 2000
குடைநிழல் நாவல் கொடகே வெளியீடு 2010
மீன்கள் சிறுகதை தொகுப்பு நற்றினை வெளியீடு 2013
தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள் பாக்யா வெளியீடு 2014

இவரது படைப்புகள் குறித்து இலங்கையிலும் தமிழகத்திலும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளனர். தெளிவத்தை ஜோசப் அவர்களின் 75ஆவது அகவையில் ஞானம் இதழ் வெளியிட்ட பவளவிழா சிறப்பு மலர் அவர் பற்றிய கனதியான கட்டுரைகளை சுமந்தவந்தமை குறிப்பிடத்தக்கது. 80ஆவது அகவையை அடையும் அமுதவிழா சிறப்பிதழாக இந்த சிற்றிதழை மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் வீரகேசரி அனுசரனையுடன் வெளியிடுவதில் பெருமை அடைகின்றது.

**தொகுப்பு : மல்லியப்பூசந்தி திலகர்**
(செயற்குழு உறுப்பினர் மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்)



# விருதுகளால் அளக்க முடியாத படைப்பாளி...!

இலங்கை தமிழ் இலக்கிய உலகில் தெளி வத்தை ஜோசப் என்ற படைப்பாளர் சிலாகித் துப் பேசப்பட்டுக் கொண்டிருப்பவர்.

இவரது படைப்புகள் மீள் பிரசுரமாகி வருவது, புதிய தலைமுறை படைப்பாளர்களுக்குக் கிடைத்திருக்கும் வரப்பிரசாதமாகும்.

சிறுகதை, நாவல், இலக்கியங்களுக்கப்பால் ஆய்வுகள், வரலாறுகள், படைப்பாளர் பற் றிய மதிப்பீடுகள் என இவரது உழைப்பு பெருமைக்குரியவை!

தெளிவத்தை, விருதுகளால் அளவிட முடி யாத விசாலம் கொண்டவர்.

தமிழ் நாடு விஷ்னுபுரம் விருது, மலையகப் படைப்புகளுக்கு மட்டுமல்ல, இலங்கையின் அனைத்து தமிழ் படைப்புகளுக்குமே கிடைத்திருக்கும் ஓர் வெகுமதியாகும். சிறந்த வாசகர்களாலும், படைப்பாளர்களாலும் கௌரவப்படுத்தி வழங்கியிருக்கும் இந்த இலக்கிய விருது, மிக மேன்மை மிக்கதென மனங் கொள்ள வேண்டும்.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக எழுதி வரும் தெளிவத்தையின் இலக்கிய உழைப்பை தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் மறந்து விடாது.

இதயம் நிறைந்த வாழ்த்துகளுடன்,

**பதுளை சேனாதிராஜா**

**இணைச் செயலாளர் ம.எ.ம.**

# அக்கினிக்குஞ்சு

**இரா. சடகோபன்**

தெளிவத்தை ஜோசப் என்ற உயர் படைப்பாளி
மலையகத்தின் குன்றிலிட்ட தீபம்
மலையகம் என்ற சொல்லுக்கு அடையாளத்தையும்
அர்த்தத்தையும் முழு உலகுக்கும்
உணர்த்திய மானிட நேயன்.

மலையகத்தில் கதையில்லை, கவிதையில்லை
காவியங்கள் தோன்றுவதற்கும் சிருஷ்டி
கர்த்தாக்கள் என்று சொல்வதற்கும் யாருமில்லை.
வந்தேறு குடிமக்கள் தானே இவர்கள்
என்று நாவறுந்தோர் சொன்ன கூற்றுக்கு
தக்க விடை பகிர்ந்தார் தம் படைப்பாலே
விருது பெற்றார், வீறுபடைத்தார்.
லயத்தில் பிறந்தோர் வெறும் விழல் அல்ல
தேயிலைச் செடி வாழ்வு கரிக்கும் கடலல்ல
கொழுந்து மலையில் கொளுத்தும் வெயில்
மலையடியில் கனக்கும் குளிர் உறையும்
கடிக்கும் அட்டை, அடிக்கும் சிறுத்தை, மிதிக்கும் யானை
எல்லாம் கதைக்கருக்கள்
அவர் எழுத்தில் மிளிரும் உணர்வலைகள்.

'மலையக தேசியத்தின்' வயது ஐம்பது
ஆரம்பித்து வைத்தார் அண்ணல் இர.சிவலிங்கம்
தொடர்ந்து முன்னெடுத்தார் அமரர் பி.சந்திரசேகரன்
அதனை எழுத்தில் உருக்கொடுத்தார்
சந்தன சாமி தெளிவத்தை ஜோசப்
அதற்கான ஆவணங்கள்...

'பாட்டி சொன்ன கதை' 'நாமிருக்கும் நாடே'
'காலங்கள் சாவதில்லை' 'பாலாயி' 'மீன்கள்'
'குடைநிழல்' 'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம்'
இன்னும் பல சிருஷ்டிகள் இவர் புகழ் கூறும்.

'மலையகத்துக்கு' யாரால் புகழ்?
இவரால் மலையகத்துக்குபுகழ்
அக்கினி குஞ்சொன்று கண்டேன்
அதை அங்கொரு காட்டிலோர் பொந்தொன்றில் வைத்தேன்.
வெந்து தணிந்தது காடு தழல் வீரத்தில் குஞ்சென்றும்
மூப்பென்றும் முண்டோ - ஆம்
எங்கள் அக்கினிக் குஞ்சு வேறொன்றுமில்லை
தெளிவத்தை, தெளிவத்தை, தெளிவத்தைதான்.





# மேலும் மெருகேற்றி...!

தமிழ்நாடு பிரபல எழுத்தாளர் ஜெயமோகன் இலக்கிய வட்டத்தினரால் அண்மையில் விஸ்ணுபுர விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட எமது மலையகத்தின் தலைசிறந்த இலக் கியப்படைப்பாளி தெளிவத்தை ஜோசப் அவர்களை பாராட்டும் இந்நிகழ்ச்சியின் போது அவருக்கு எனது வாழ்த்துகளை தெரிவிக்க கிடைத்த இவ்வாய்ப்பிற்காக பெரிதும் மகிழ்ச் சியடைகின்றேன்.

வாழ்வின் பல துறைகளிலும் பின்னடைந்துள்ள மலையக சமுதாயத்திற்கு இன்று பெருமையுடன் கூறிக்கொள்ளவுள்ள வெகு சில துறைகளில் படைப்பிலக்கியத் துறை முக்கியமானதென்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். லௌகீக வாழ்வில் குறிப் பாக கல்வி, அரசியல் மற்றும் சமூக, பொருளாதார வளர்ச்சி என்பன ஒன்றுடன் ஒன்று கலந்து நாட்டில் ஒரு பிரிவினரை அடக்கி ஒடுக்கி நசுக்க முடிந்தாலும் உணர்வுகளையும் சிந்தனைகளையும் முற்றாக ஒடுக்கி விட முடியாது. உணர்வுகள் சிந்தனையாக வெளிப்ப டுகையில் படைக்கும் ஆற்றலும் வெளிப்படலாம். அதனை ஒரு சிலரே எழுத்து வடிவில் வெளிக்கொணர முயற்சித்து வெற்றியும் அடைந்துள்ளனர். அவ்வாறானவர்களில் தெளிவத்தை ஜோசப் அவர்களை நான் முதல் வரிசை இலக்கிய கர்த்தாவாகவே பார்க்கின்றேன்.

தான் பெற்ற கல்வியறிவினை சுயமாக மேலும் மெருகேற்றி தொழில் துறையில் தன்னை உருவாக்கிக் கொண்டு மனிதன் தனியே நாட் டுக்காக மாத்திரம் வாழ்பவன் அல்ல என்பதனை உலகிற்கு பறைசாற்றிய பெருமையினை நாம் தயங்காது ஜோசப் அவர்களுக்கு வழங் கலாம். தனது சிந்தனையின் வெளிப்பாடுகள் சிறுகதைகளாக சமூக விழிப்புணர்வு கட்டுரைகளாக பல தசாப்தங்களாக படைத்து பிற்கா லங்களில் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியிலும் இன்று அங்கீகரிக்கப்பட்ட ஒரு எழுத்தாளராக வளர்ந்து மலையக தமிழ் இலக்கியவாதிகளில் தலைசிறந்தவராக மாத்திரமின்றி தமிழ் இலக்கியத்தின் கருவறைக்காப்பாளர்களினாலேயே (தமிழ்நாடு) இன்று பாராட்டியும் விருது வழங் கியும் கௌரவித்துள்ளமையினை வலுவிழந்து கிடக்கும் மலையகத்திற்கு கிடைத்த ஆறுதலாகவும் ஊக்குவிப்பாகவும் உள்ளது.

எதிர்காலத்தில் வருங்கால தமிழ் இலக்கிய சமூகம், மலையக இலக்கியத்தின் தந்தையெனப் போற்றப்பட வேண்டியவர் தெளிவத்தை ஜோசப்பாக இருப்பார் எனும் எனது ஆரூடம் மெய்யாகாது போக காரணம் இருப்பதாக எனக்கு தெரியவில்லை.

தெளிவத்தை ஜோசப் அவர்களின் இலக்கியப் பணி தொடர வேண்டும். அதற்கு அவருக்கு நல்ல ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் மனோபாவமும் தொடர வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.


**பேராசிரியர் மா.செ.மூக்கையா**

*முன்னாள் புவியியல் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்*

*பேராதனை பல்கலைக்கழகம்*

*துணைவேந்தர் கிழக்கிலங்கை பல்கலைக்கழகம்*

*இலங்கை.*


# தெளிவத்தையின் ஆய்வுப் பரப்பு...

தெளிவத்தை ஜோசப் அவர்களது ஆய்வுத்துறை பரப்பு என்பதும் சற்று விரிவாக ஆராயப்பட வேண்டியதாகும். இவர் மேற்கொண்டிருக்கின்ற மிகப்பிரதானமான மூன்று ஆய்வுகளையும் எடுத்து நோக்குமிடத்து, இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து இதழியல் வரலாறு, மலையக சிறுகதை வரலாறு, மலையக நாவல் வரலாறு (தற்போது செய்துகொண்டிருக்கிறார்) என்பன வாகும். இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து இதழியல் வரலாறு என்பது இலங்கையில் ஆங்கிலேய காலத்தில் பத்திரிகை வாசனை தோற்றம் பெற்றதிலிருந்து இவரது இதழியல் வரலாறும் தோற்றம் பெ

றுகிறது. உதய தாரகை என்னும் பத்திரிகைக்கு முற்பட்ட காலத்திலிலுள்ள புதினத்தாள்கள் தொடக்கம் 2000 ஆம் ஆண் டுவரையான பத்திரிகைகள், சிற்றிதழ்கள் வரை அனைத்தினது வரலாற்றையும் உள்ளடக்கியதாகவே அமைந்திருக்கிறது. ஆய்வின் காலப்பரப்பு நூறுவருடங்கள் என்பது ஆய்வுத்துறையில் இவரது ஆழத்தன்மைக்கு சான்றாக அமைகிறது. இதழியல் துறை சார்ந்த கற்கை நெறிகளுக்கு இந்த இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து இதழியல் வரலாறு எனும் கட்டுரைத்தொடர் 2001 – 2002 காலப்பகுதியில் தினகரன் வாரமஞ்சரியில் தொடர்கட்டுரையாக வெளிவந்தது. இது நூல் உருவம் பெரும் பட்சத்தில் மிகப்பெரும் சான்றாதாரமாகவும், மாணவர்களுக்கான கைந்நூலாகவும் அமையும்.



# வயது நீட்சியிலும் குறைந்து செல்லும் விளைவு விதியை சந்திக்காதவர்

தமக்குரிய தனித்துவமான சொல் அலகுகளால் ஒடுக்கப்பட்டோரின் உணர்வுகளைக் கலை வெளிக்கு கொண்டு வருபவர் தெளிவத்தை ஜோசப் அவர்கள். "ஒடுக்கப்பட்டோர்" என்ற அடையாளத்தினர் காலனித்துவத்தின் விளிம்பு நிலையினராவர். பின் காலனிய நிலையிலும் அந்த அடையாளம் தொடர்ந்து கொண்டிருத்தல் கால மாற்றத்தின் பின்னடைந்த விசைகளையே குறிப்பிடுகின்றது.

ஒடுக்கு முறையின் குறியீடாக அமையும் லயன் வாழ்வின் அனுபவச் சிதறல்களின் நுண் அலகுகளையும் சமூக மாற்றத்தின் அழுத்தத் துணிக்கைகளையும் புனைவாகவும், புனைவு வழி "ஈட்டிகளாகவும்" தருவதில் அவர் தனித்துவமானவர். அவற்றோடு இணைந்த வாசகங்களாக அவரது எழு நடை (style) அமைந்துள்ளது.

தெளிவத்தையின் ஆளுமையை ஆழ்ந்து நோக்குவதனால், அவரை ஒரு மீயறிகை (metacognition) வயப்பட்ட எழுத்தாளர் என்றே குறிப்பிட வேண்டும். தமது நிலைப்பாட்டையும், செயற்பாட்டையும் தாமே ஆழ்ந்து விளங்கிக் கொள்ளல் மீயறிகையாகும். அதுவே எழுதும் செயற்பாட்டை மேற்கொள்வதற்குரிய அகவிசையாகும். மீயறிகையை வளர்த்துக்கொள்ளல் எழுதும் வனப்பை வளர்த்துக் கொள்ளலாகும்.

எழுதும் செயல் முறை, அதன் வழியாக எழும் விளைவு, ஆகிய இரண்டிலும் ஊன்றிய விசைகளுடன் நின்றமையால், அவரின் எழுத்தாக்கங்கள் காலவெளியிலே கரையாது நிற்கின்றன. அவருக்கே உரிய சுய நெறிப்பட்ட " கோடலாக்கம்" எழுத்துக்களுக்குரிய தனித்துவமான நுழைவாயிலை பிறப்பிக்கின்றது.

வயது நீட்சியிலும் குறைந்து செல்லும் விளைவு விதியைச் சந்திக்காத தெளிவத்தை அவர்களுக்கு எமது நல் வாழ்த்துகள்.

**- பேராசிரியர் சபா ஜெயராசா**

# ஜம்பம் இனி பலிக்காது!

என்னதான் பிரயத்தனப்பட்டாலும் அவர்களுடைய ஜம்பம் இனி செல்லாது. உழைக்கும் வகுப்பார் உண்மைகளைக் கண்டு கொண்டனர். உங்களுடைய சக்தி உங்களுக்குத் தெரியாது. அது மிகவும் மகத்தானது. அதை எதிர்த்து நிற்க எந்த சக்தியாலும் முடியாது.

மனித வாழ்க்கையில் மாறுதல்கள் நடந்து கொண்டே இருக்க வேண்டும். தன் பிழைப்புக்காக விலங்குகளை எதிர்த்தும் இயற்கையை எதிர்த்தும் போராடிய ஆதி மனிதன் நாடோடியாக இருந்து விவசாயியாக மாறுதல் பெற்றான். விவசாயம் முதலில் தோன்றியபோது மனிதனுடைய வாழ்க்கையில் பெரும் மாறுதல் உண்டாயிற்று.

வேட்டையாடிக்கொண்டு திரிந்தவர்கள் ஒரு இடத்தில் வாழ தலைப்பட்டனர். கிராமங்களும் நகரங்களும் தோன்றின. விவசாயம் வளர செல்வம் வளர்ந்தது. ஜனத்தொகை பெருகிற்று. கலைகளும் கைத்தொழில்களும் தோன்றின. உற்பத்தி முறையில் தோன்றிய மாறுதலால் சமூக வாழ்க்கையே மாறியதற்கு உதாரணம் தொழிற்புரட்சி, தொழிற் புரட்சியின்போது உற்பத்திக்காக இயந்திரம் புகுத்தப்பட்டது. உற்பத்தி முறைகள் மாறவே பொருளியல் அமைப்பு மாறுகிறது. பொருளியல் அமைப்பு மாறவே மக்களின் கருத்தும் சட்டங்களும், அரசியலும் மாறுகின்றன.

சரித்திரம் நமக்கு சமூகத்தின் மாறுதல்களையே காட்டுகின்றது. உழைக்கும் வர்க்கத்தின் வளர்ச்சியாலும், போராட்டங்களினுலுமே சமூக மாறுதல்கள் நடைபெறுகின்றன. இப்போதிருக்கும் நிலையில் இருந்து ஒரு மாறுதல் நமக்கு மிகவும் அத்தியவசியமாகப் படுகின்றது.


தேயிலைத் தோட்டங்களில் உழைப்பவர்கள் யார்? இந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள். கேட்டுக்குள்ளே கார் கொண்டு வர அவர்களுக்கு பாஸ் உண்டு. வியாதிக்கு மருந்து போட உள்ளேயே ஆஸ்பத்திரி உண்டு. அவர்கள் பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடம் உண்டு. எல்லா வசதிகளும் உண்டு. ஆனால், இந்த மண்ணின் மக்களாகிய உங்களுக்கு இதில் எது உண்டு?

இந்த அக்கிரமங்கள் அழிய, அநியாயங்கள் புதைபட, உங்களுடைய ஓட்டுக்களை எங்களுக்கே போட்டு இந்த ஆட்சியாளர்களை மண் கவ்வச் செய்யுங்கள்.

**மாறுதல்கள்**

**தெளிவத்தை ஜோசப்**

# தெளிவத்தை என்றொரு புத்தகம்!



உழைக்கும் வர்க்கத்தில் கொதித்து குமுழியிடும் எழுத்து சிந்தனைகள்தான் மலையக இலக்கியமாகிறது. தமிழ் இலக்கிய பெருவெளியில் சுமை நிறைந்த படைப்புக்களை சமூக நீதியின் முன்னால் சமர்ப்பித்துக் கொண்டிருப்பவர்கள்தான் மலையக எழுத்தாளர்கள்.

இந்த சமூகத்தின் இலக்கிய நெடுஞ்சாலையில் முதல் காலடி பதித்தவர் கோ.நடேசய்யர். இரண்டாவது நிலையில் கவிஞர் தாகூர் நிகருக்குப் படைப்புகள் யாத்த கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை. இவருக்கு அடுத்தவர் இலக்கியச் செம்மல் என்.எஸ்.எம். ராமையா.

இம்மூவரைத் தொடர்ந்து எங்களது புதிய பாதையில் நான் காவது மைல் கல்லாக கம்பீரமாய் நின்று கொண்டிருப்பவர்தான் தெளிவத்தை ஜோசப்!

சக படைப்பாளர்களை சக படைப்புகளை அறியாத, அறிய விரும்பாத இன்றைய தமிழ் இலக்கிய கலாசாரத்தில் தெளிவத்தை விதிவிலக்கானவர். நம் நாட்டு படைப்பாளர் அவர்தம் படைப்புகள் பற்றி விரல் நுனியில் தகவல் ஏந்தி வைத்திருக்கும் ஓர் அபுர்வமான இலக்கியவாதி!



பிரதேச, தேசிய வேலிகளுக்கப்பால் சர்வ தேசிய தமிழ் கூறும் நல்லுலகை தெளிவத்தை ஜோசப் என்ற ஒரு பெறுமதியான புத்தகம் எழுத்துள்ளவரை அலங்கரித்துக் கொண்டே யிருக்கும்!

**மனம் நிறைந்த வாழ்த்துகளுடன்,**

**மு.சிவலிங்கம்.**

**உபதலைவர் மலைநாட்டு**
**எழுத்தாளர் மன்றம்**

# உவகை பொங்கும் தருணங்கள்...



























# நூல் முகங்கள்



உரையாடல்



காலங்கள் சாவதில்லை
தெளிவத்தை ஜோசப்
வீரகேசரி பிரசுரம்



பாலாயி
தெளிவத்தை ஜோசப்


மலையகச் சிறுகதைகள்


மலையகச்
சிறுகதை
வரலாறு
-தெளிவத்தை ஜோசப்


மே 2010
ஞானம்
120
கலை இலக்கியச் சஞ்சிகை
தெளிவத்தை ஜோசப்
பவளமலர்


பரிசு பெற்ற சிறு கதைகள்
1998
துரைவி - தினகரன்


தெளிவத்தை ஜோசப்பின்
"மலையக சிறுகதைகள்"
ஓர் ஆய்வு
தமிழ்த்துறை
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம் - 612 001.
ஜனவரி - 2012


மல்லிகை


நூல் வெளியீட்டு விழா
அழைப்பிதழ்
உழைக்கப் பிறந்தவர்கள்
இடம் இங்கரன் மண்டபம் கொட்டாஞ்சேனை
23-11-1997 ஞாயிறு மாலை 4.30
தலைமை: திரு. பி. பி. தேவராஜ் அவர்கள்
பாராளுமன்ற உறுப்பினர்
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது
மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்

# நாம் செய்ய வேண்டிய நன்றிக்கடன்...!

மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்கள் கடந்த ஆண்டு (2013) டிசம்பர் மாதத்தில் தமிழ் நாட்டின் கோயம்புத்தூரில் நடந்த விஷ்ணுபுரம் இலக்கிய வட்டத்தின் வருடாந்த விழாவில் அந்த ஆண்டிற்கான இலக்கிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை மலையகத்தமிழர்களாகிய எம் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும். இவ்விருதுக்காக அவருக்கு ஒரு இலட்சம் இந்திய ரூபாய் கொண்ட பணப் பொதியும் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டன. கடந்த காலங்களில் ஏ.மாதவன், பூமணி, கவிஞர் தேவதேவன் போன்ற இந்திய எழுத்தாளர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு அவரது எழுத்தாக்கங்களுக்காக இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களும் சிங்கப்பூர் வாழ் தமிழர்களும் அழைத்து கௌரவித்துள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது. மலையக எழுத்தாளர் தலாத்து ஓய கணேசன் அவர்களுக்கு கனடா நாட்டில் வழங்கப்பட்ட தமிழியல் விருதுக்கு அடுத்ததாக தெளிவத்தை ஜோசப் அவர்களே வெளிநாடொன்றில் விருது பெற்ற மலையக எழுத்தாளராவார்.

தமது எழுத்தாக்கங்களுக்காக தெளிவத்தை ஜோசப் அவர்கள் உள்நாட்டிலும் அரசாங்கத்தினாலும், பல்கலைக்கழகங்களினாலும், வேறு தனியார் மன்றங்களினாலும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட ஒருவராகும். அவர் இதுவரை தான் பெற்ற எல்லா இலக்கிய விருதுகளுக்கும் சிகரம் வைக்கும் வகையில் விஷ்ணுபுரம் இலக்கிய வட்ட விருதை வென்று சாதனை படைத்துள்ளார்.

ஏறக்குறைய நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக மலையக மக்களின் வாழ்க்கையைப்பற்றியும் அம் மக்களது பண்பாட்டைப்பற்றியும் தொடர்ச்சியாக எழுதி சாதனை படைத்துள்ளார் அவர். தோட்டப்புற இலக்கியத்தின் வரலாறு பற்றி அவர் எழுதிய நூலும், 'நாமிருக்கும் நாடே', 'நாங்களும் பாவிகளாக இருக்கிறோம்', 'குடை நிழல்', 'பாலாவி' ஆகிய நூல்களும் இங்கு குறிப்பிடத்தக்கன. 1960களில் தமிழகத்திலிருந்து வெளிவந்த 'உமா', 'பேசும் படம்', என்பவற்றிலும், கொழும்பிலிருந்து வெளியாகிய 'கதம்பம்' என்ற இதழிலும் அவர் எழுதி வந்தார். அவரது நான்கு தசாப்த கால இலக்கிய பணிக்கு கிடைத்த ஒரு வெகுமதியே விஷ்ணுபுரம் இலக்கிய வட்ட விருதாகும். பெருந்தோட்டத்தமிழரின் வாழ்க்கையையும் பண்பாட்டையும் பற்றி உணர்வு பூர்வமாக தமது எழுத்தாக்கங்களிலே எடுத்துக்காட்டியமைக்காகவே அவர் அந்த உயரிய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. இச்சந்தர்ப்பத்தில் மலையக எழுத்தாளர் மன்றம் அவருக்கு விழா எடுப்பது மிக மிகப் பொருத்தமானதே.

மலையகத்தில் புதிய எழுத்தாளர்கள் தோன்றுவதற்கு மலையக இளைஞர்கள் தெளிவத்தை ஜோசப் அவர்களை முன்னோடியாகக்கொண்டு தமது எழுத்தாக்கங்களைப் படைப்பதே. அவருக்கு எமது சமூகம் செய்யக்கூடிய பெரிய நன்றிக்கடனாகும்.

**மு. சின்னத்தம்பி,**
**ஓய்வு பெற்ற**
**பொருளியல் பேராசிரியர்.**

# மலையகத்தின் இமயம்

**-சுப்பையா கமலதாசன்**

கண்டிய பிரதேசத்தில் கோப்பி பயிர் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் கூலித் தொழிலாளர்கள், பயிற் செய்கை காலத்திற்கு மட்டும் தங்கியிருந்து தொழில் புரிவதும் பின் இந்தியாவுக்கு திரும்பி செல்வதுமாக இருந்திருந்தனர். 1839க்கு பிற்பட்ட காலத்தில் தேயிலை பயிர் செய்கையினால் நிரந்தர தொழிலாளர்கள் இலங்கைக்கு தேவைப்பட்டனர். அப்பொழுது பெரிய கங்காணிகளால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தொழிலாளர் குழுமம்; மலை பிரதேசங்களில் குடியேற்றப்பட்டு பெருந்தோட்ட பயிர் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் இன்றுவரை தங்களை பெருந்தோட்ட பயிர்செய்கையில் ஈடுபடுத்தியும் வருகிறார்கள். இலங்கையில் இவ்வாறானதொரு இரு நூற்றாண்டு வரலாற்றை கொண்டிருக்கும் இந்திய வம்சாவளி மக்கள் என அழைக்கப்படுகின்ற இம் மக்கள் பல போராட்டங்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் தங்களது உரிமைகளை உறுதி செய்து கொண்டு "மலையகம்" என்ற தனித்துவ அடையாளத்துடன் தேசியம் என்று பேசுமளவுக்கு வளர்ச்சி கட்டத்தினை எய்தியிருக்கிறார்கள்.

இன்று மலையகம் என்ற தனிக்கு மூமம் "தேசியம்" என்ற கொள்ளைகளுடனான உரிமைக்கோரலை முன்னெடுக்கிறது என்றால் வெறுமனே மலையக வரலாற்றில் தடம் பதித்த அரசியல் தலைமைகளினால் மட்டுமல்ல. இவ்வாறானதொரு அணிவகுப்புக்கு அடிநாதமாக எழுத்தாளர்களும் இருந்தார்கள் என்றால் அதில் மிகையில்லை.

இலக்கியம் என்பது காலத்தை காட்டும் கண்ணாடியாக அமைய வேண்டும் என்பார்கள். குறித்த காலச்சூழலை, அச்சூழல்சார் வாழ்வியல் அம்சங்களை புதிய தலைமுறையினருக்கு எடுத்து காட்டுகின்ற இலக்கியம் என்கிற கண்ணாடியினை ஆக்குபவர்களாகவும் அல்லது கண்ணாடியாகவும் பிரதிபலிப்பவர்களாக எழுத்தாளர்கள் இருந்திருக்கிறார்கள் இருந்தும் வருகிறார்கள். அதற்கு ஈழத்து இலக்கியமும் அதில் ஒரு வகுதியாக இருக்கின்ற மலையக இலக்கியமும் விதிவிலக்காக அமைந்துவிடவில்லை.

மலையகத்தை சார்ந்த எழுத்தாளர்கள் மலையக வாழ்க்கைச் சூழலில் நிகழும் அவலங்களை மறைத்து வைத்திருக்கும் மூடுதிரையினை கிழித்தெறிந்துவிட்டு பிரச்சினைகளை வெளிக்கொணரவில்லையென்றால் இன்று இவ்வாறானதொரு தனித்துவ அடையாளம் என்பது மலையக சமூகத்தினைப் பொறுத்தவரை கேள்விக்குறியானதாகவே அமைந்திருக்கும்.

மலையகத்தில் சில எழுத்தாளர்கள் அரசியல் தொழிற்சங்க செயற்பாட்டாளர்களாகவும் (கோ.நடேசையர், சி.விவேலுப்பிள்;ளை இர.சிவலிங்கம் போன்றவர்கள்) இருந்து கொண்டு தங்களது விழிப்புணர்வு பிரசாரங்களையும், கொள்கைகளையும் தொழிலாளர்களின் துன்பியல் வாழ்வினையும் வெளிக்கொணர்ந்தனர். சில எழுத்தாளர்கள் அரசியல் தொழிற்சங்க செயற்பாடுகளினூடாக பங்களிப்பு செலுத்தாது எழுத்துத்துறையில் மாத்திரம் மலையக பிரச்சினைகளை வெளியுலகுக்கு முன் வைப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வந்துள்ளனர். அதில் என்.எஸ்.ராமையா, தெளிவத்தை ஜோசப், சாரல் நாடன் போன்றோரை குறிப்பிடலாம். இன்று இந்த பட்டியல் நீண்டு கொண்டு செல்வதும் அறிந்ததே.

ஈழத்து இலக்கியத்தில் மலையக இலக்கியம் எனும்போது அதனை வளர்த்தெடுத்தவர்களாக எத்தனையோ பேர் எம்மத்தியில் இருந்தாலும் தற்பொழுது "வாழ்நாள் சாதனையாளர் விருது" பெறும் மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்கள் பற்றியும் அவரது எழுத்து பணி பற்றியும் சற்று உற்று நோக்குவது அவசியமாகிறது.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

# கொடகே விருது படங்கள்















புனைகதை (சிறுகதை, நாவல்) என்னும்போது 'நிலப்பிரபுத்துவ அமைப்பு மாற்றத்தினாற் தோன்றிய மத்திய தர வர்க்கத்தின் இலக்கிய குரலே புனைகதை' என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் தனது நூலில் விளக்கியுள்ளார்.

புனைகதையின் சிறுகதை வளர்ச்சி கட்டத்தினை 1850 தொடக்கம் 1925 முதற்கட்டமாகவும்;, 1926 – 1945 வரை இரண்டாம் கட்டமாகவும், 1945 தொடக்கம் 1960 வரை மூன்றாவது கட்டமாகவும் 1960க்குப் பின் நான்காம் கட்டமாகவும் வகுக்கலாம். (தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும் – பெ.கோ.சுந்தரராஜன், சோ.சிவபாதசுந்தரம்) இதனடிப்படையில் பார்க்கும்பொழுது ஈழத்தில் நான்காம் கட்ட பிரிவினருக்குள் உருவாகிய புனைக்கதை எழுத்தாளர்களுள், மலையக இலக்கியம் பற்றிய அலகினை புரட்டும்போது தவிர்க்க முடியாத பக்கமாய் இருப்பவர் தெளிவத்தை ஜோசப் அவர்கள்.

சில நேரங்களில் தற்போது வகுத்துள்ள ஈழத்து இலக்கிய சிறுகதை, நாவல் வரலாற்றில் மலையக புனைக்கதை எழுத்தாளர்கள் அங்கமாக கொள்ளப்படவில்லை. இதற்கு காரணம் வடக்கு, கிழக்கு இலக்கியத்தினை மாத்திரம் ஈழத்து இலக்கியமாக சிலர் கருதியமையே. இந்த கூற்றினை பிற்காலத்தில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களை போன்றவர்களும் ஏற்றுக் கொண்டு ஈழத்து இலக்கியத்தில் மலையக இலக்கியத்தினையும் உள்வாங்கிக் கொண்டார்கள் என்பதும்; இங்கு குறிப்பிட்டுக்கூறக் கூடியதே.

மலையக எழுத்தளார்களானவர்கள் மூன்று வகைப்படுவர். மலையகத்தில் தோட்ட தொழிலாளியின் பிள்ளையாக பிறந்து வாழ்வோடு வாழ்வாக மலையக வாழ்வியலை உணர்ந்து எழுதுபவர்கள் ஒரு வகையினர்.

மலையகம் என்ற எண்ணக்கருவை கேட்டறிந்து விளங்கி துன்ப துயரங்களை தெரிந்து (ஆய்வு செய்து) அதன்மூலம் மலையகம் பற்றிய இலக்கியம் படைக்கும் பிறபிராந்திய எழுத்தாளர் இன்னொரு வகையினர். இவர்களால் மலையகம் பற்றிய இலக்கியங்கள் படைக்கப்பட்டாலும் அதில் எந்த அளவிற்கு மலையக மக்களின் வாழ்வு உயிரோட்டம் பெறுகிறது என்பது ஆராயப்பட வேண்டியவையே. ஆனாலும் மலையக இலக்கியம் எனும் ஆய்வில் மலையகம் பற்றிய பிறபிராந்திய எழுத்தாளர்களின் படைப்புகள் பற்றிய ஆய்வும் அவசியமாகிறது.

மற்றொரு வகையினர் அதிகார வர்க்கத்தினை சேர்ந்தவர்கள் (உயர் தொழில் புரிபவர்கள்) மலையக சூழலில் வாழ நிர்பந்திக்கும்போது அவர்களோடு வாழ்ந்த அனுபவங்களின் உணர்வுகளில் எழுத முனைபவர்கள். இவர்களது இலக்கிய படைப்பானது மேலதிகாரிகளின் சார்பாக, நிர்வாகம் சார்பாக அவர்களை மேலுயர்த்தி காட்ட துணியும் இலக்கியமாக அமையலாம்.

ஆனால் ஆசிரியர் (தந்தையார்) குடும்பத்தின் வழி வந்த ஒருவர் மலையக மக்களின்பால் நின்று அவர்களின் துன்ப துயரங்களை பற்றி எழுதுவதென்பது சற்றுக் கடினமானதாகவே இருக்கும். அதேநேரத்தில் எதிர்ப்புகளும் அதிகமாகவே மேற்கிளம்பும். இதனை எதையுமே பொருட்படுத்தாது விதிவிலக்காக எழுத்துப் பணியை மேற்கொண்டவரே தெளிவத்தை ஜோசப் அவர்கள். அந்தவகையில்; மலையக இலக்கியத்தில் அவரின் பங்களிப்பு மேலும் சிறப்பிடம் பெறுகிறது. இதற்கு காரணம் அந்த (தந்தையார்) தோட்டத்துப்பள்ளி ஆசிரியர் லயத்தின்



தொங்கல் வீட்டில் குடியிருந்தது காரணமாகவிருக்கக்கூடும்.

இவ்வாறானதொரு தீவிர எழுத்துப்பணிக்கு இவர் மலையகத்தில் வாழ்ந்த விதமும் மூலக்காரணமாக அமைந்திருக்கலாம். 1920 களில் மலையகக் கல்வி பற்றி சர்ச்சைகள் வெகுவாக மேற்கிளம்பத் தொடங்கின. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்த பிரச்சினை எதிரொலித்ததன் காரணமாக தோட்ட நிர்வாகிகள் பாடசாலைகளை அமைத்து அதனை அரசுக்கு அறிவிக்க வேண்டுமென மேலும் வலியுறுத்தப்பட்டது. இந்த காலகட்டத்தில் தென்னிந்தியாவிலிருந்து கற்பிக்கும் ஆசிரியக்குழுக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். (தெளிவத்தை ஜோசப் அவர்களின் நேர்காணல் – மூன்றாவது மனிதன்)

அக்குழுக்களில் ஒருவராக வந்தவரே ஜோசப் அவர்களின் தந்தை சந்தனசாமிபிள்ளை அவர்கள். அவர் ஆசிரியர் (வாத்தியார்) தொழிலினை மேற்கொண்டிருந்தாலும் அவர் வசிப்பதற்கு தோட்ட தொழிலாளர்கள் வாழும் லயத்தில் வழங்கப்பட்டன. தொழிலாளர்கள் அனுபவிக்கும் அதே லய வாழ்க்கை, பெற்றோருடன் சேர்த்து எட்டு பேர் அந்த இரண்டு அறைகளில்; வாழ்ந்த அனுபவம் இவரை இவ்வான எழுத்து பணிக்கு தூண்டியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். இதனை அவரும் தனது நேர்காணல்களில் சொல்லியிருக்கின்றார்.

தெளிவத்தை ஜோசப் அவர்களின் குடும்பச்சூழலானது, பதுளை ஊவா கட்டவளை என்ற தோட்டத்தில் சந்தனசாமி பிள்ளை, பரிபூரணம் ஆகிய இருவருக்கும் இரண்டாவது பிள்ளையாக 1934.02.16 திகதியன்று பிறந்தவரே ஜோசப் அவர்கள். ஞானப்பிரகாசம் (மூத்தவர்), சந்தனசாமி, சேவியர், பாக்கியசாமி (பரிபூரணன் – எழுத்தாளர்) ஆகிய நான்கு சகோதரர்களும், அருமைசெல்வி (வடகரை – கும்பகோணம்) என்ற சகோதரியும் இவரது உடன் பிறப்புகளாவர். 28.08.1968இல் கொழும்பு கிரேண்பாஸ் என்ற இடத்தில் வாழ்ந்த மரியசூசை லெக்ரான் என்பவருக்கும் திரேசம்மாள் என்பவருக்கும் பிறந்த பிலோமினா ரூபெள என்பவரை வாழ்க்கைத் துண்ணாய் இணைத்துக் கொண்டு திரேசா (திரேசா – புஷ்பராஜ்), தோமஸ் ரமேஸ் (தோமஸ் ரமேஸ் – ஹிமாலி), திமொதி ரவீந்திரன் (திமொதி ரவீந்திரன் – அரூஸியா), தெக்ளா சியாமளா (தெக்ளா சியாமளா – டேவிட்) ஆகியோருக்கு பொறுப்புள்ள தந்தையாகவும், ஆர்த்தி, ரந்தீரா, ரொஸாரா, அம்றா, சித்ரா, அதீப், சில்வியா ஆகியோருக்கு அன்பு தாத்தாவாகவும் இருந்து வருக்கின்றார்.

தற்போது தனியார் நிறுவனம் ஒன்றில்; கணக்காளராக இருக்கும் அதேவேளை இதற்குமுன் ஸ்டார் கொன்பெக்ஸனரி எனும் பாரிய நிறுவனத்திலும் கணக்காளராகவும் பணிபுரிந்துள்ளார்.

பேசும்படம் என்ற சஞ்சிகையில் பார்த்த படங்களில் உள்ள பிடிக்காத காட்சிகளை ‘வெட்டுங்கள் வெட்டுங்கள்’ என்ற பகுதிக்கு பாடசாலை காலத்திலேயே எழுதி அனுப்பும் பழக்கம் இவருக்குண்டு. ‘எஸ்.ஜோசப் – ஊவா கட்டவளை, ஆலிஎல’ என்ற பெயரில் பல கடிதங்களை பிரசுரித்திருந்தன. இவ்வாறு ஆரம்பமானதே இவரது எழுத்துப்பணி. அதனை தொடர்ந்து 1955இல் அவரது அண்ணன் ஞானப்பிரகாசம் (எழுதுவினைஞர்) தொழில் நிமித்தம் பதுளையின் இன்னொரு தோட்டமான தெளிவத்தையில் தங்கியிருக்கும் காலத்தில் அவருக்கு ஒத்தாசையாய் அவருடன் இருந்த ஓய்வு நேரங்கள்

# விஷ்ணுபுரம் விருது படங்கள்























அவரை எழுத்துப்பணிக்கு இழுத்துச் சென்றது.

1960ஆம் ஆண்டில் தமிழ்வாணனின் கல்கண்டு என்ற இதழுக்கு "பால்காரப் பையன்" என்ற கதை எழுதியனுப்பியிருந்தார். இதுவே இவரது இலக்கிய வரலாற்றில் முதல் சிறுகதையாகும். அனால் அது கடைசிவரையும் பிரசுரிக்கப்படவில்லை. தமிழகத்திலிருந்து ஜி.உமாபதி அவர்கள் நடாத்திய உமா என்ற மாத இதழுக்கு, அவ்விதழின்; அட்டைப்படத்துக்கான கதையினை எழுதியிருந்தார். பாதையில் கிடந்த வாழைப்பழத்தோலில் வழுக்கி விழும் வாலிபனையும் அதைப் பார்த்துக் குறும்பாகச் சிரிக்கும் இரண்டு இளம் பெண்களையும் சுட்டி நிற்கும் அந்த கதையின் பெயர் "வாழைப்பழத் தோல்" இதுவே பிரசுரமான அவரது முதல் கதை. இதற்கு பிறகு 'மாயை' 'அழகு' ஆகிய கதைகளை மோகன் அவர்கள் நடத்திய கதம்பம் என்ற இதழ் பிரசுரித்திருந்தது.

ஜோசப் அவர்கள் தெளிவத்தை தோட்டத்து ஆசிரியர் (வாத்தியார்) அதோடு பகுதி நேர எழுதுவினைஞராக (தோட்டத்து காரியாலய கிளாக்கர்) தொழில் புரிய ஆரம்பித்த காலத்தில் வீரகேசரியில் பிரசுமான தோட்ட மஞ்சரி எனும் பகுதிக்கு 'பெயரோ பெயர்' என்ற கட்டுரையினை எழுதியிருந்தார். பாடசாலை வரவு இடாப்பில் மாணவர்களின் பெயர்களை கொச்சைப்படுத்தும், சீரழிக்கும் முறைகேடான சம்பவங்களுக்கு எதிரான கட்டுரையது. தோட்ட மஞ்சரியில் பிரசுரமானது தெளிவத்தை ஜோசப் என்ற பெயருடன். அன்றிலிருந்து தெளிவத்தை ஜோசப் ஆனார்.

50களின் கடைசியில் தொடங்கியிருந்தாலும் 1963 களிலேயே இலக்கியத்துறையில் தடம் பதித்து பலராலும் அறியப்பட்டவரானார். 1963ஆம் ஆண்டில் வீரகேசரி நடாத்திய சிறுகதை போட்டியில் இவரது சிறுகதையான 'பாட்டி சொன்ன கதை' முதலிடத்தை பெற்றுக் கொண்டது. பாட்டி சொன்ன கதை பழங்கதை என்று புறந்தள்ளிவிடமுடியாது. இன்றைய சூழலிலும் இந்த பாட்டியின் கதை பலருக்கு அவசியமாகத்தான் இருக்கிறது. அதேபோல 1963 இல் மலைமுரசு நடத்திய சிறுகதை போட்டியில் 'நாமிருக்கும்நாடே' என்ற சிறுகதையும் முதலிடம் பெற்றது. 1964 இல் வீரகேசரி நடாத்திய சிறுகதை போட்டியிலும் இவரது 'பழம் விழுந்தது' என்ற சிறுகதை முதலிடத்தை பெற்றுக் கொண்டதும் இன்னும் பிரபலமடைய தொடங்கினார். இதன் பின்னர் இலக்கிய உலகில் இவர் பெயர் பரவ தொடங்கியது. அந்தவகையில் பார்க்கின்றபோது தெளிவத்தை ஜோசப் என்பவரை இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்து வைத்து பெருமை வீரகேசரியையே சாரும். இதன் பின் 1965 இல் வீரகேசரி சிறுகதை போட்டியை நடத்த திட்டமிட்டதுமே இம்முறையும் "தெளிவத்தை ஜோசப் எழுதுகிறாரா என்ற கேள்விகள் கூட எழுந்தன. அதனால் என்னை நடுவர் குழுவில் அப்போது அதற்கு பொறுப்பாக இருந்த வீரகேசரியின் துணையாசிரியர் திரு.கார்மேகம் அவர்கள் இணைத்து விட்டார்" என்று அவரது தினகரன் நேர்காணல் ஒன்றிலும் தெரிவித்திருந்தார். அவ்வாறானதொரு இடத்தினை தக்க வைத்துக் கொண்டார். வீரகேசரியில் உதவி ஆசிரியராகவும் மலைநாட்டு எழுத்தாளர் மன்ற செயலாளராகவும் இருந்த திரு. எஸ்.எம்.கார்மேகம் அவர்கள் தெளிவத்தை ஜோசப் அவர்களை மட்டுமல்லாது மலையகத்தில் எழுத்தார்வம் மிக்க பலரையும் இது போல ஊக்குவித்திருக்கிறார், இலக்கிய உலகிற்கு அறிய செய்திருக்கிறார் என்பதும் மறக்கப்படக்கூடாது.

# விஷ்ணுபுரம் விருது விழாவுக்கு முதல்நாள் நடந்த தெளிவத்தையுடனான கலந்துரையாடல் பற்றி எழுத்தாளர் ஜெயமோகன்

இரவு தெளிவத்தை ஜோசப் வந்தார். தெளிவத்தைஜோசப்பின் மலையக நண்பர் ஒருவர் இந்தியா, இலங்கை ஒப்பந்தம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு கோத்தகிரியில் இருந்து வந்தார். அவரை தெளிவத்தை பிறகு பார்க்கவில்லை. அவர் கோத்தகிரியிலேயே மறைந்து விட்டார். அவரது கல்லறையைப் பார்க்க தெளிவத்தை ஆசைப்பட்டார்.தெளிவத்தையை அழைத்து வந்த திலகர் என்ற நண்பர் தெளிவத்தையை கோத்தகிரிக்கு அழைத்துச் சென்றார். கல்லறை தோட்ட காவலாளி குன்னூரில் இருந்து வரவேண்டியிருந்தது. அவர் வந்தபின் கல்லறைத் தோட்டத்தை திறந்து நண்பரின் மீது முளைத்த புல் மேட்டைக் கண்டு அஞ்சலி செலுத்திய பின் தெளிவத்தை வந்திருந்தார். தெளிவத்தையுடனான உரையாடல் நள்ளிரவு பன்னிரெண்டு மணிவரை நீடித்தது. தெளிவத்தை உற்சாக மான உரத்தகுரலில் நிறைய கையசைவுகளுடன் பேசக்கூடியவர். மலையக மக்களின் அடையாளத் தேடல், மலையக இலக்கியத்தின் போராட்டம் பற்றி விரிவாகவும் நுணுக்கமான நகைச்சுவையுடனும் பேசினார். ஓர் இலங்கை அரசியல்வாதியின் மனைவி மலையாளி. தெளிவத்தையை அவருக்கு அறிமுகம் செய்தபோது நீங்கள் மலையாளியா என்று கேட்டாராம். ஏனென்றால் ஊர்ப்பெயரை பெயருடன் சேர்த்து இலங்கையில் எவரும் அன்று எழுதுவதில்லை. தெளிவத்தை அதற்கான காரணத்தை சொன்னார். தங்களை தோட்டத்திலி ருந்து வந்தவர்கள் என்று சொல்லவே அன்றெல்லாம் படித்த மலையக மக்கள் கூச்சப்படுவார்கள். தோட்டக் காட்டான், கள்ளத்தோணி என்று அவர்கள் இழிவுபடுத்தப்பட்டகாலம். ஆகவே, நான் தோட்டக்காட்டான், அந்த மக்களைப் பற்றி எழுதுபவன் என்று பிரகடனம் செய்யவே அப்படி பெயரை வைத்துக் கொண்ட தாக தெளிவத்தை சொன்னார். தெளிவத்தை என்பது ஆயிரம் ஏக்கருக்கு மேல் பரப்புள்ள ஒருதோட்டத் தின்பெயர். இலங்கையின் தோட்டங்கள் வெள்ளையர் கைவசமிருந்தன. சுதந்திரத்துக்குப் பின் அங்கே வாழ்ந்த பாதிக்கு மேல் தொழிலாளர்களை இலங்கை அரசு அடித்துத் துரத்தியது. அந்நிலங்களை கைய கப்படுத்தியது. மலையக மக்கள் ஒருசாரார் இந்தியா வந்தனர். இங்கே தோட்டக் கூலிகளானார்கள். மீதியானோர் கிழக்குப் பகுதியில் காடுகளின் குடியேறி கூலி உழைப்பாளிகளானார்கள். காடு திருத்தி விவசாயம் செய்தனர். அவர்களுக்கு அங்கே குடியுரிமை இல்லை. உழைப்பதற்கான உரிமைமட் டும்தான் உண்டு. உள்நாட்டுப்போர் மூண்டபோது அவர்களில் பாதிப்பேர் இந்தியாவுக்கு அக திகளாகவந்தனர். இருநாட்டிலும் குடியுரிமை இல்லாத மக்களாக அகதி முகாம்களில் ஒன்றரை லட்சம் பேர் இன்றும் வாழ்கிறார்கள். அங்கேயே நீடித்த மலையக மக்கள்தான் அங்கே கடைசிப் போரில் போர்நடுவே சிக்கி உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள். நாடிழந்து இலங்கைக்கு சென்று நாடில்லாதவர்களாக இந்தியாவுக்கு அக திகளாகவந்து இருநூறாண்டுகளாக நாடில்லாதவர்களாக இன்றும் வாழும் ஒருமக்கள் கூட்டம். இந்த மாபெரும் அபத்த நாடகத்தை நாம் உணர்ந்திருக் கிறோமா என்ற பிரமிப்பு உருவானது. இன்றைய தோட்ட நிலைமைகளைப் பற்றிப் பேச்சுவந்தது. இன்றும் வாழ்க்கை போராட்டமானதுதான் என்றார். ஆனால் இன்று கல்வி கற்கும் வேட்கை அதிகரித்திருக்கிறது. அதற்கான வசதிகளும் கூடியிருக்கின்றன. இன்று தோட்டங்களின் உரிமை எவரிடம் என எவரோ கேட்க சிரித்தபடி 'இந்தியாவிடம்' என்றார் தெளிவத்தை. ஆம், பெரும்பாலான தோட்டங்கள் 'டாட்டா' முதலிய இந்தியப் பெருமுதலாளிகளுக்கு உரிமையானவையாக உள்ளன இன்று. அரங்கில் உருவான ஒருவகை அதிர்ச்சியை உணரமுடிந்தது.



(ed;wp: http://www.jeyamohan.in)

# விஷ்ணுபுரம் சிறப்புச் செய்திகள்

## Brewing a Painful Tale of Tamil TEA ESTATE WORKERS

Colombo-based writer Thelivathai Joseph recalled the painful history of the early Tamil plantation workers in Sri Lanka during a visit to the city.

B Meenakshi Sundaram reports

## எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்புக்கு தமிழக 'விஷ்ணுபுரம்' விருது

கோவையில் பாராட்டு விழா

## விஷ்ணுபுரம் விருது விழா 2013

## THE INDIA'S NATIONAL

TIRUCHIRAPALLI

Regd. TRY/062/2012-2014 • RNI No. TNENG/2004/49966 • ISSN 0971-7...

AWARD FOR SRI LANKAN WRITER

PAGE 4

FATIMA BHUTTO

INTERVIEW ON OP-ED PAGE

Printed at Chennai, Coimbatore, Bangalore, Hyderabad, Madurai, Noida, Visakhapatnam, Thiruvananthap...

Proposed Telangana

## தெளிவத்தை ஜோசப்புக்கு ...ிழகத்தில் இன்று கௌரவம்

...தில் ஆரம்பித்து ஈழத்து இலக்...தேச இலக்கியத்தளத்திலும் ...திவு செய்துள்ள மலையகத்தின் ...யும் மலைநாட்டு எழுத்தாளர் ...ங்கை, சிங்கள தமிழ் எழுத்தாளர் ...தைய தலைவருமான எழுத்தாளர் ... தமிழகத்தில் இன்று விருது ...கபடுகின்றார்.

பல எழுத்தாளரான ஜெயமோகனின் ...வலின் வாசகர் வட்டத்தினால் இலக்...க்கு 'விஷ்ணுபுரம்' விருது வழங்கப்...ு. இதற்கு முன்னர் இந்திய எழுத்...மாதவன், பூமணி மற்றும் கவிஞர் ...கியோர் இவ்விரு...க்கொண்டுள்ளனர். ...ஷ்ணுபுரம் விரு... இலக்கிய ஆளு...ிவத்தை ஜோசப் ...ப்பட்டுள்ளார். ...விழாவில் தெளி...ாசப் எழுத்தாளர் ...ர் இந்திராஜித்தினால் ...டை போர்த்தி கௌர...ா அதேவேளை, ஒரு ...ந்திய ரூபாவுடன் நினைவுச்சின்னமும் வழங்கப்படவுள்ளது. தெளிவத்தை ஜோசப்பின் எழுத்துப்பணிக்கும் இலக்கியப் பயணத்திற்கும் குடும்ப அளவில் ஒத்துழைத்தமையை கௌரவிக்கும் வகையில் அவரது துணைவியார் திருமதி.பிலோமினா ஜோசப்பும் இவ்விழாவில் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. திருமதி சுதா சீனிவாசன் பொன்னாடை போர்த்தி இந்த கௌரவத்தினை வழங்கவுள்ளார்.

தமிழ்நாடு, கோயம்புத்தூர், பாப்பநாயக்கன் பாளையம், மணி மேல்நிலைப்பள்ளி கலையரங்கில் விஷ்ணுபுரம் இலக்கிய வட்டத்தினரால் ஏற்பாட்டில் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி தலைமையில் இன்று நடைபெறும் விழாவில் தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் அடங்கிய 'மீன்கள்' சிறுகதை தொகுப்பு நற்றிணை பதிப்பக வெளியீடாகவும், கொடகே நிறுவனத்தினரால் 2010 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தெளிவத்தை ஜோசப் எழுதிய தமிழகத்தின் 'சுபமங்களா' பரிசு பெற்ற 'குடைநிழல்' நாவல், மதுரை 'எழுத்து' பதிப்பகத்தினரால் மறுபதிப்பாக வெளியிடப்படவுள்ளமை சிறப்பம்சமாகும். சிறுக...தொகுப்பினை மலையாள கவிஞர் 'கள்ளிக்காடு' பாலச்சந்திரனும் , குடைநிழல் நாவலை திரைப்பட இயக்குனர் பாலா வும் வெளியிட்டு வைக்கவுள்ள...

1960 களில் இருந்து இன்றுவரை எழுதிக்கொண்டிருக்கும் தெளிவத்தை ஜோசப் சிறுகதை, நாவல், திறனாய்வு, நாடகப்பிரதி, திரைக்கதை வசனம் மற்... இலக்கிய ஆய்வு கட்டுரைகள் எனும் பல்துறை ஆ...மையாளராவார். இவரது காலங்கள் சாவதில்லை (நாவல் வீரகேசரி வெளியீடு 1974), நாமிருக்கும் நாடே (சிறுகதைகள் வைகறை வெளியீடு 1979), பாலாயி (மூன்று குறுநாவல்கள் துரைவி வெளியீடு 1997), மலையகச்சிறுகதை வரலாறு (ஆய்வு –துரைவி வெளியீடு 2000) குடைநிழல் (நாவல் கொடகே வெளியீடு 2010) ஆகிய படைப்புகள் நூலுருப்பெற்றுள்ளன. அதேநேர... 'இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும்' (பா... –எழுநா இணைந்த பதிப்பு) 'தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள்'; (பாக்யா பதிப்பகம்) ஆகிய இர... நூல்கள் விரைவில் வெளிவரவுள்ளன.

இதுவரை இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கலாபூஷணம் மற்றும் தேசிய சாஹித்திய மண்டல விருது (இரண்டு தடவைகள்), சம்பந்தன் விருது (யாழ்ப்பாணம்), வாழ்நாள் சாதனையாளர் விருது (கொடகே), கம்பன் கழக இலக்கிய விருது (கொழும்பு), பேராதனைப் பல்கலைக்கழக இலக்கிய விருது (2007), தமிழியல் விருது (மட்டக்களப்பு), கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க விருது (2013) என பல முக்கிய கௌரவங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார் இவர் .

தலாத்துஓயா கே.கணேஷுக்கு கனடா நாட்டில் வழங்கப்பட்ட தமிழியல் விருதுக்கு அடுத்தபடியா... இலங்கைக்கு வெளியே இலக்கிய விருது பெறும் மலையக எழுத்தாளர் இவராவார்

**மல்லியப்புசந்தி திலகர் (தமிழகத்திலிருந்து..)**

தெளிவத்தை ஜோசப்

## ජනවාරගක සමයය ඇති කළ හැකියි

මහාචාර්ය ජී.එල්.පීරිස්

## දිනමිණ

විෂ්ණුපුරම් සාහිත්‍ය සම්මානයෙන් පුද ලබන

## තෙලිවත්තෙයි ජෝසප්

## Vishnupuram award for Sri Lankan Tamil writer

Special Correspondent

**CHENNAI:** Sri Lankan Tamil writer Thelivathai Joseph, whose writings captured the life and culture of the plantation Tamils, has been selected for this year's Vishnupuram Elakkiya Vattam award.

The award, instituted by the readers of writer Jeyamohan's masterpiece Vishnupuram, carries Rs 1 lakh cash and a memento. Tamil writer Indira Parthasarathy will confer the award at a function in Coimbatore on November 22. A book on Joesph and his works will be released on the

Theliavathi Joesph

Elakkiya Vattam. Santhanasami Joseph's ancestors went

Born in Thelivathai esta... near Nuvaralea in 1934, Jo...seph worked as an elementary school teacher before becoming an accountant at a chocolate factory. He shot to fame with the publication of his first novel *Kalangal Savathillai* in 1974. His other works are Namirukkum Nade, Palayi and Kudai nizhal. He has also authored a detailed history of literature of plantation area, besides publishing anthologies of the writers.

In the past Vishnupuram Awards were given to writers A. Madhavan, Poomani and

## தினமணி

திங்கள்கிழமை, 23 டிசம்பர், 2013

## ...பலருக்கும் தெரியாத ஈழ சோகம்: எழுத்தாளர் ஜெய...

இம்மலர் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவட்) லிமிட்டெட்டாரால் கொழும்பு 14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.